முழுப் பதிப்புரிமையுடையது / *All Rights Reserved*

# தமிழ்வழி பரீட்சைகள்

## முதலாம் தவணைப் பரீட்சை - மாதிரி வினாத்தாள்
## First Term Examination - Model Paper

**தரம் 07**

தமிழ் மொழியும் இலக்கியமும் I,II
Tamil Language and Literature I,II

இரண்டு மணித்தியாலம்
Two hours

**ஆசிரியர்: ஏ.கஜன் B.A Tamil**
077 2400 707 / 076 8044 959
மல்லாவிக் கஜன் (ஆதித்தியன்)
Group e.way தமிழ்வழி

தமிழ் இனிது கல்வி நிலையம் பாலிநகர், வவுனிக்குளம்
புவியியல் ACCOUNTING WORLD 2ஆம் குறுக்கு வீதி, மல்லாவி
புவியியல், தமிழ் பிரத்தியேக வகுப்புக்கள்

சுட்டெண்: ..................................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 20** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

| | |
|---|---|
| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
| பகுதி II மொத்தப் புள்ளிகள் | |
| இறுதிப் புள்ளிகள் | 100 |

## பகுதி / Part - I

- **1 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

**1.** "சோலையைக் கண்ணுற்று மிகவும் களிப்படைந்தேன்" - இங்கு **களிப்பு** என்பதன் **ஒத்த சொல்.**
1. கோபம் 2. மகிழ்ச்சி 3. புகழ்ச்சி 4. இகழ்ச்சி

**2.** "ஆயும் மலர்ப்பொழில் செய்து வந்தேன்" - இங்கு **பொழில்** என்பது.
1. சோலை 2. பள்ளத்தாக்கு 3. காடு 4. சமவெளி

**3.** "அவன் வராதது எனக்கு அனுகூலமாக இருந்தது" - இங்கு **அனுகூலம்** என்பதன் எதிர்ப்பொருள்.
1. நன்மை 2. வசதி 3. ஏற்பாடு 4. பிரதிகூலம்

**4.** "எனது தங்கை கருங்குழலினை உடையவள்" - இங்கு **குழல்** என்பது.
1. இசைக்கருவி 2. முகம் 3. கூந்தல் 4. புன்னகை

**5.** "அவள் முகத்தில் களங்கமிருக்கவில்லை" - இங்கு **களங்கம்** என்பது.
1. குற்றம் 2. புன்னகை 3. அழகு 4. உறுதி

**6.** உறவு முறைக் கடிதமொன்றின் உறுப்பு **அல்லாதது.**
1. முகவரி 2. உள் முகவரி 3. முடிப்பு 4. செய்தி

**7.** "இது பற்றி எனக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை" - இங்கு **ஆட்சேபனை** என்பது.
1. உடன்பாடு 2. மறுப்பு 3. விண்ணப்பம் 4. முறைப்பாடு

**8.** **புகலிடம்** என்பது.
1. சரணாலயம் 2. கற்குகை 3. வீடு 4. சோலை



தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

**9.** அருகில் காட்டப்பட்டுள்ள **நிறுத்தற்குறியீடு.** **!**
1. அரைப்புள்ளி 2. மெய்ப்பாட்டுக்குறி 3. முக்காற்புள்ளி 4. முற்றுப்புள்ளி

**10.** காந்தியடிகளுக்கு **'மகாத்மா'** எனும் பட்டத்தை வழங்கியவர்.
1. திருலோகசீதாராம் 2. இரவீந்திரநாத் தாகூர்
3. **H.M.P.**மொஹிதீன் 4. கா.மாணிக்கவாசகர்

**11. 'இன்ரநெற் (Internet)'** என்பதன் தமிழ் வடிவம்.
1. இணையம் 2. வையக விரிவு வலை 3. அச்சுப்பொறி 4. வலைத்தளம்

**12. உயிர் நெடில்** எழுத்துக்களின் எண்ணிக்கை.
1. 126 2. 05 3. 133 4. 07

**13.** ஐவகை நிலங்களுள் **அடங்காதது.**
1. முல்லை 2. குறிஞ்சி 3. உவர் 4. மருதம்

**14.** உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் இணைவதால் பிறக்கும் எழுத்து.
1. கிரந்த எழுத்து 2. உயிர் மெய் எழுத்து
3. தனி நெடிலெழுத்து 4. ஆய்த எழுத்து

**15. 1875** ஆம் ஆண்டளவில் பயன்படுத்தப்பட்ட தட்டச்சுப் பொறி.
1. ஸ்டான்டர்ட் 2. ரெமிங்டன் 3. எரிகா 4. யுரேனிகா

**16.** வாக்கியமொன்றில் கருத்து முற்றுப்பெறுமிடம்.
1. பயனிலை 2. எழுவாய் 3. செயப்படுபொருள் 4. அடைமொழி

**17. தமிழ்த் தட்டச்சின் தந்தை** எனும் கட்டுரை இடம்பெறுவது.
1. இலக்கியப் படகு 2. குழந்தைச் செல்வம்
3. மலரும் மாலையும் 4. சரஸ்வதி களஞ்சியம்

**18. "**வெள்ளை முயல் துள்ளி ஓடியது**"** - இங்கு இடம்பெறும் **வெள்ளை** என்பது.
1. இரட்டைக்கிழவி 2. அடைமொழி
3. இணைமொழி 4. அடுக்கிடுக்குத் தொடர்

**19.** பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்தாக **அமையாதது.**
1. ஹ 2. ஸ்ரீ 3. ஷ 4. ண்

**20.** 'இருபத்தைந்தாவது ஆண்டு' நிறைவில் கொண்டாடப்படும் விழா.
1. அமுதவிழா 2. பௌர்ணமி விழா 3. வெள்ளி விழா 4. பொன் விழா

**(20 X 2 = 40 புள்ளிகள்)**


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

## பகுதி / Part - II

**01. பின்வரும் தலைப்புகளில் யாதேனும் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

**(அ)** எனக்கு இரண்டு சிறகுகள் முளைத்தால்......
**(ஆ)** சுற்றுச் சூழல் மாசடைதல்
**(இ)** உடைந்த குடையின் கதை
**(ஈ)** காட்டுவளம் காப்போம் **(18 புள்ளிகள்)**

**02. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

**1)** **பந்தி** என்றால் என்ன?
**2)** கவிஞர். அழகசுந்தர தேசிகர் எழுதிய நூல்கள் **இரண்டு** தருக.
**3)** தீங்கிழைத்தவரைத் தப்பாமல் தண்டிக்கும் மிருகம் எது?
**4)** சிறைச்சாலையில் காந்தியடிகளுக்குச் செய்து கொடுக்கப்பட்டிருந்த வசதிகள் எவை?
**5)** முழு உரிமையாக நாம் பெற்றுக்கொண்ட செல்வங்கள் எவை?
**6)** ஆறு சென்று வந்த இடங்கள் **இரண்டு** தருக. **(12 புள்ளிகள்)**

**03. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டன என்பதை எழுதுக.**

**1)** "என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு எவ்வித அச்சமுமில்லை"
**2)** "நீ! நிரூபித்தது எவ்வளவு உண்மையாக இருக்கின்றது."
**3)** "நல்லதம்மா அப்படியே இருக்கிறேன்"
**4)** "சரி, நம் வீட்டில் இப்போது மூன்று பேர் இருக்கின்றோம்"
**5)** "நீர் பேசுவது விந்தையினும் விந்தை" **(10 புள்ளிகள்)**

**04. பின்வரும் தலைப்பில் 50 – 75 சொற்களில் அமையுமாறு கடிதம் எழுதுக.**

உமது பாடசாலையில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த கண்காட்சி நிகழ்வு தொடர்பில் வெளிநாட்டிலுள்ள உமது தந்தைக்கு ஓர் **கடிதம்.**

**(10 புள்ளிகள்)**

**05. பின்வரும் சொற்களின் பொருள் துலங்குமாறு வாக்கியம் அமைக்குக.**

**1)** நீரேரி
**2)** மட மட
**3)** மூலை முடுக்கு
**4)** பயிர் பச்சை
**5)** சுற்றுலா **(10 புள்ளிகள்)**


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

## பகுதி I விடைகள்

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|
| 1 | 2 | 11 | 1 |
| 2 | 1 | 12 | 4 |
| 3 | 4 | 13 | 3 |
| 4 | 3 | 14 | 2 |
| 5 | 1 | 15 | 2 |
| 6 | 2 | 16 | 1 |
| 7 | 2 | 17 | 4 |
| 8 | 1 | 18 | 2 |
| 9 | 2 | 19 | 4 |
| 10 | 2 | 20 | 3 |


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்